செ.வெ.எண்-43 நாள்-17.10.2018

# பத்திரிக்கைச் செய்தி

அனைத்து அரசு மற்றும் தனியார் துறை வளாகங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், தனியார் மருத்துவமனைகள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள், சிமெண்ட் தொழிற்சாலைகள், தனியார் வணிக வளாக கட்டிடங்கள் மற்றும் வீடுகளின் சுற்றுபுறத்தை தூய்மையாக வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல், தண்ணீர் தொட்டிகள் மற்றும் குடிநீர் விநியோகிக்கும் இயந்திரங்களை சுகாதார முறையில் பராமரித்திட வேண்டும். மேற்காணும் இடங்களில் நீர் தேங்கி கொசுப்புழு உற்பத்தி காணப்படும் பகுதிகளில் 24.10.2018-க்கு பின் அபராதத் தொகை வசூலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் பிரதிவாரம் வியாழக்கிழமை டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு தினமாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து வியாழக்கிழமை தோறும் அனைத்து பள்ளி, கல்லூரி மற்றும் அரசு அலுவலக வளாகங்களில் காணப்படும் ஏடிஸ் கொசுப்புழு உற்ப்பதிதயாகும் இடங்களை கண்டறிந்து அதனை அகற்றும் பணிகளை மேற்கொள்ளவும், அரியலூர் மாவட்டத்தில் இயங்கும் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில்

மருத்துவ அலுவலர் தலைமையிலான மருத்துவக்குழுவினர் மாணவ மாணவியர்களுக்கு இறை வணக்கத்தின் போது காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மற்றும் சுகாதார உறுதிமொழி எடுத்திடவும், காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் இதர பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் நிலவேம்பு காசாயம், உப்புக்கரைசல் ஆகியவை வழங்கிடவும் மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட உள்நோயாளிகளுக்கு சாப்பாட்டு கஞ்சி வழங்கிடவும், தற்காலிக மஸ்தூர்கள் வீடு வீடாகச்சென்று கொசுப்புழு ஒழிப்புப்பணியில் ஈடுபடும் பொது பொது மக்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிடுமாறும் மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்படும் நபர்கள் தன்னிச்சையாக எவ்வித மருத்துவமும் மேற்கொள்ளாமல் காய்ச்சல் கண்டவுடன் அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளில் சென்று உரிய சிகிச்சை பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**